**மன்னார் பிரதேச சபை**

**மன்னார் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினைச் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2019 மார்ச் 29 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் இந்த நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 31 ஒக்ரோபர் 2019 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இன் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படத்தப்படல் வேண்டும் | எதிர்காலத்தில் பின்பற்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டுக்கான சபையின் நிதி நிலமை கூற்றுக்களில் உள்ள சில்லறைக் கடன் கொடுனர், பொறித் தொகுதி மற்றும் இயந்திரத்தின் மீதியும் குறிப்புக்களில் உள்ளபடியான மீதியும் ரூபா 158,462 ஆல் இணங்கப்பட்டிருக்கவில்லை. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் இணக்கம் செய்யப்பட்டு கணக்குகளில் சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்கீட்டின் பதிவு தவறுகள் திருத்தப்பட்டு இணக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் இத்தவறுகள் இடம்பெற மாட்டாது. |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 ஆம் ஆண்டு பெறுகை வழிகாட்டியின் இல 5.4.12 இன் படி சபையினால் செலுத்தப்பட்ட பெறுமதி சேர்வரியின் பிரதி கணக்காய்விற்கு அறிவிக்கப்படவில்லை. | கணக்காய்வினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் | எதிர்காலத்தில் பெறுமதி சேர் வரி தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும் |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டம் உப பிரிவு 16(2) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கணக்காய்விற்கு உரிய நேரத்தில் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | எதிர்வரும் நிதியாண்டில் வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571 | ஐந்து எண்ணிக்கையானகாலங்fle;j வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா. 152,614 தொடர்பில்ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காலம்கடந்த வைப்புக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் | இரண்டு வைப்புக்கள் மீளளிப்பு செய்யப்பட்டுள்ளதுடன் 03 வைப்புகளுக்கான கோரிக்கை கடிதம் ஒப்பந்தக்காரரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது மிக விரைவில் அவற்றினை மீளளிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 15 வருடங்களுக்கு மேலாக வருமானம் பட்டியலிடப்பட்டிருக்காதது வருமான | வருமானம் பட்டியலிடப்பட்டு சேகரிப்பதற்கு நடவடிக்கை | கேபடிவம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

சேகரிக்கப்பின் வினைத்திறனின்மையை எடுக்கப்படல் வேண்டும்.
வெளிப்படுத்துகின்றது

| | வருமான மூலம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் ரூபா | மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா | பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா * | சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா | திசெம்பர் இல் உள்ளவாற மொத்த நிலுவைக ரூபா |
| | | - | -- | -- | -- | - | - | - | -- |
| i. | வீதவரியும் வரியும் | 526,000 | 239,354 | 163,082 | 808,659 | 415,000 | - | 618,881 | 732, |
| ii. | வாடகைகள் | 9,595,600 | - | 7,952,916 | 2,830,000 | 9,114,600 | - | 9,187,230 | 2,859, |
| iii | மனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 719,250 | - | 1,445,725 | - | 1,439,500 | - | 1,716,450 | - |
| iv | ஏனைய வருமானம் | 9,228,130 | - | 19,272,883 | 14,337,064 | 8,499,860 | - | 12,113,892 | 23,351, |
| | | **20,068,980** | **239,354** | **28,834,606** | **17,975,723** | **19,468,960** | - | **23,636,453** | **26,943,** |

* 2017 ஆம் ஆண்டிற்கு பட்டியல் படுத்தப்பட்ட வருமானம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை

### 2.1.1 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சோலை வரி அறவிடுதல் தொடர்பாக சொத்துக்கள் நிகழ்கால மதிப்பீடுகளிற்கு அமைய மதிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அது தொடர்பாக செயற்பாடுகளை முன்னேடுப்பதில் தாமதம் காணப்படுகின்றது | உரிய காலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்யப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.1.2 வாடகைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு வருமதியான ஏழு ஆண்டு காலப்பகுதிக்கிடைப்பட்ட இறைச்சிக்கடைகளின் நிலுவை ரூபா 832,400 இனை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள்எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய காலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மிகுதி தொகையை அறவிட சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளோம். |
| (ஆ) | சபைக்கு வருமதியான ஓராண்டுக்கு மேற்பட்ட வாகன வாடகை நிலுவை ரூபா 877,230 இனை அறவிட | நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு | மிகுதி ரூபா 877,230 இனை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | மேற்கொள்ளப்படுகின்றது. |

**2.1.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்**

**(அ) நீதிமன்ற தண்டப்பணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 355,663 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | ரூபா 355,663 இனை பெற்றுக்கொள்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

**(ஆ) முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,664,735 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்படவேண்டியிருந்தன. | முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | நிலுவையினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள் மற்றும் மக்கள் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயம் பின்வருமாறு.

**நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 23 ஆம் திகதிய க.செ.பொது 2018/61 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக்கு கடல்கள் மற்றும் கடல்சார் வளங்களை பாதுகாப்பதுடன் நிலைத்திருக்கும் வகையில் விழிப்புணர்வு | சுற்றறிக்கைக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | எதிர்வரும் காலங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய திட்டங்களை அமுல்படுத்துவதுடன் பொதுமக்களுக்கும் அறிவுறுத்த நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகள் மற்றும் கடல், கடலோர மாசு கட்டுப்பாடுகள் தொடர்பான திட்டங்கள் எவையும் தயார்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படும் |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் பதின்னான்கு எண்ணிக்கையான பதவிகளுக்கு ஆளணி பற்றாக்குறை காணப்படுவதுடன் இது தொடர்பில் சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | உரிய காலங்களில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு சிறந்த சேவையினை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பற்றாக்குறையாகவுள்ள ஆளணியினால் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**3.3 சொத்து முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டிலுள்ள பன்னிரண்டு காணிகள் இருபத்தைந்துஆண்டுகளுக்கு மேலாக பெறுமதியிடப்பட்டு கணக்கிற்கு கொண்டுவரப்படவில்லை. | காணிகள் மதிப்பிடப்பட்டு சொத்துக்கள் பதிவேட்டில் பதியப்படல் வேண்டும். | குறித்த சொத்துக்கள் தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு கணக்குக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**3.3.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சபையின் பொறுப்பிலுள்ள ரூபா 7,619,000 பெறுமதியான எட்டு வாகனங்கள் 05 மாதம் தொடக்கம் 05 வருட காலப்பகுதிக்கு மேலாக பாவனையிலீடுபடுத்தப்படாத போதும் 2015 யூலை 07 திகதிய அரச சுற்றறிக்கை 02/2015 பிரகாரம் பாவனையிலிருந்து அகற்றுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய காலங்களில் வாகனங்கள் திருத்தப்பட்டு பாவனையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | பயன்படுத்தக்கூடிய வாகனங்களை திருத்தி பாவனைக்கு உட்படுத்தப்படும் அதே வேளை திருத்தம் செய்து பாவிப்பதில் சிக்கன மற்ற தன்மை காணப்படும் வாகனங்களிற்கு பொருத்தமான மாற்று நடவடிக்கைகள் எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

### 3.3.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பயன்பாட்டில் காணப்படுகின்ற ரூபா 58,074,251 பெறுமதியான பதினான்கு வாகனங்களின் உரிமை மாற்றம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உரிய காலங்களில் வாகனங்களை உடமையாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | தற்போது தொடர்சியாக உரிமைமாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பாதீடு செய்யப்பட்ட எட்டு வகையான செயற்திட்டங்களில் ரூபா 1,000,000 பெறுமதியான 3 செயற்திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் சபையினால் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை | பாதிடப்பட்ட செயற்திட்டங்கள் முடிந்தளவில் அக்காலப்பகுதிகளிலே நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் முன்னைய வருட செயற் திட்டங்கள் செயற்படுத்தப்படும். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த உள்ளகக் கணக்குப் பரிசோதனைகளால் எவ்வித முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வின் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மேலதிக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |